REVISED

செ.கு. எண்: 87

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.7.2011

**மேட்டூர் அணையிலிருந்து** மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய் பாசனத்திற்காக 1.8.2011 முதல் தண்ணீர் திறந்து விடும்படி, சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்குக் கரை கால்வாய்களில் நடப்பாண்டு பாசனத்திற்காக 2.8.2011 முதல் **137 நாட்களுக்கு** தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் 17,230 ஏக்கர் நிலங்களும், சேலம் மாவட்டத்தில் 16,443 ஏக்கர் நிலங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 11,327 ஏக்கர் நிலங்களும், **ஆக மொத்தம் 45,000 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்